திராவிடன்

ஆசிரியர்: என்.வி.என்

மாலை 13 : விலை 16 காசு : 26-9-59 சனிக்கிழமை : மலர் 5

அண்ணனை அடைந்தேன்!

[இராம. அரங்கண்ணல்]

கழகத்திலுள்ள ஒவ்வொரு வருக்கும் ஒரு 'சுயசரிதம்' உண்டு. இது சுயசரிதமல்ல! இதிலும், 'கழகம்' இருக்கிறது.

★

சுமார் இருபதாண்டுகளுக்கு முன்பு என்று நினைக்கிறேன். திருத்துறைப்பூண்டியில் எட்டாவதுபடிவத்தில் படித்துக்கொண்டிருந்தேன். வயது பன்னிரண்டு. முரட்டுக் கதர்தான் என் உடலில் இருக்கும். எல்லோரது மனதிலும் காங்கிரஸ் குடிகொண்டிருந்த காலம். ஒரு நாள் வீதிகள்தோறும் வளைவுகள் கட்டியிருந்தார்கள். "அடுக்குச்சொல்லழகா, வருக!" 'தளபதியே வருக!' என்பன போன்ற வர்ணனைகள். பள்ளித் தோழர்கள் [illegible]கொண்டார்கள், திருக்குளத்து அரசமரத்தடியில் இன்றுகூட்டம்என்று. சுதந்திரம் வாராமற் செய்யும் கட்சியின் கூட்டம், என்றுதான் எங்களுக்கெல்லாம் அப்போது தெரியும். என்ன பேசுகிறார்கள் என்று கேட்க அல்ல—வேடிக்கை பார்க்க போயிருந்தோம்!

எங்கள் தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த பன்னீர் செல்வம், இந்திய உபகண்டத்தைப்பற்றி பிரிட்டிஷாருக்கு ஆலோசனை கூறுபவராக இலண்டனுக்குச் சென்றபோது, வழியில் விமானவிபத்து ஏற்பட்டு, அமரன் கடலில் விழுந்து, உருத் தெரியாமற் போன நிகழ்ச்சி நடந்த நேரம். அதைப்பற்றித்தான், மேடையில் அந்தக் குள்ளமான உ[illegible]பேசிக்கொண்டிருந்தது. [illegible]னை,பேசிற்று என்பது இப்போதும் என் கவனத்திலிருக்கிறது.

"அமரன் கடலே! எங்கள் சீமான் செல்வம் எங்கே? எங்கே? என்று கேட்கிறோம். கண்ணீரைக் காட்டிக் கதறியவாறு கேட்கும் நமக்கு அந்தக் கடல், அலைகளைத்தான் பதிலாகத் தருகிறது!"

இந்த ஒருசொல் உடனே திரும்பிவிட வேண்டும் என்று போன என்னை உட்கார வைத்தது. அப்போதெல்லாம் என போன்றவர்களுக்குப் பெரிய பிரசங்கி வேதாரண்யம் சர்தார் வேதரத்தினம்தான். அவர்கள் பேசுவதற்கும் இந்தக் குள்ள உருவம் பேசும் தமிழுக்கும், பெரிய இடைவெளியிருந்தது! தமிழ் இங்கே கொஞ்சியது, விளையாடியது, கீதம்கேட்பது போலிருந்தது! கூட்டம் முடிந்ததும். எல்லோருடனும் சேர்ந்து 'நல்லாத்தான் பேசினார்' என்று சொல்ல நேர்ந்தது என்றாலும், அப்போதும் நீதிக்கட்சியின் மீதிருந்த அவநம்பிக்கை குறையவில்லை. முதன் முதலில் அண்ணாவின் திருவுருவையும் பேச்சையும் இப்படித்தான் சந்[illegible]த்தேன்.

ஓரிரு ஆண்டுகளுக்குப் பிறகு திருவாரூரில் பிரபாத் டாக்கீஸ் எனும் கொட்டகையில் அண்ணா பேசினார், நான் திருவாரூரில் படித்துக் கொண்டிருந்தேன். அப்போதும் நான் கதர்வாதிதான் என்றாலும், அண்ணாவின் பேச்சைக் கேட்கப் போயிருந்தேன். அன்றுள்ள அரசியல் நிலைமைகளைப்பற்றியெல்லாம் விளக்கக் கேட்டேன். மனம், கொஞ்சம் தடுமாறியது. இப்படிப் பேசுகின்றவரை நெருங்கிப்போய் 'தரிசிக்கவேண்டும்' என்று கூட்டம் முடிந்ததும் போனேன்.

அவரைச்சுற்றிச்சிலர் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தார்கள் அவர்களுடன். மிக மிகச் சாதாரணமாக அவருடன் பேசிக்கொண்டிருந்தவர்களில் என்னுடைய எதிரி(அப்போதுதான!) கருணாநிதியும் ஒருவர். பார்த்துவிட்டு திரும்பிவிட்டேன். அதிலிருந்து அண்ணா எழுதும், "திராவிட நாடு" பத்திரிகையை படிக்க வேண்டும் என்கிற ஆவல் எழும்ப அதைவாங்கி, வெளிப்படையாகப் படித்தால் என்னுடைய தேசியம் என்ன ஆவது? ஆகவே திருட்டுத்தனமாகப் படிப்பதுண்டு. படிக்கப் படிக்க, ஏதோ ஒருபோதை ஏறுவது போலிருக்கும்! சில வாரங்களில் 'திராவிடநாடு' ஏடு கிடைக்காமற் போய்விடும். இந்த மு. கருணாநிதி, சும்மாயிருந்தால்தானே? அவருக்கென்று ஒரு தனி நண்பர் பெயர் தென்னன். இருவரும் காலையில் பள்ளிக்கு வரும்போதும்சரி, மாலையில் விசய புரத்துக்கு 'விஜயம்' செய்யும்போதும் சரி கையிலேயே திராவிட நாட்டை வைத்துக்கொண்டு விற்பனை செய்வார்கள்! தெரிந்தவர் அகப்பட்டுவிட்டால்போதும், விற்காமல் போகமாட்டார்கள் எப்படிஏடுகிடைக்கும்? அப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் சங்கடமாகவேயிருக்கும்! யாருக்கும் தெரியாமல் திரு

(4-ம் பக்கம் பார்க்க)

திராவிடன்

சென்னை | 26—9—59 | சனிக்கிழமை

அசகாய சூரர்?

தமிழ் நாட்டு முதலமைச்சர் திரு. காமராசர் அவர்கள் பேசக் கற்றுக்கொண்டாராம்! ஆதலாலே பேசாமடைந்தையாக யிருந்த அவர் இப்போதெல்லாம் வெளுத்துக்கட்டுகிறாராம், கனம். முதலமைச்சர் வாய் அசைப்பதற்கான வகையில் பயிற்சி அளித்த "மகா மேதை"யின் உள் எண்ணம் யாதாயிருக்குமோ அறியோம்! ஏனெனில் சும்மாயிருந்த சங்கை ஊதிக்கெடுத்தான் ஆண்டி என்றது போலவே, காமராசரின் வாய்வீச்சு காட்சியளிக்கிறது.

சென்னை மாநகராட்சி மன்றத் தேர்தலில் படுதோல்வியடைந்ததிலிருந்து காமராசருக்கு அரசியல் ஜன்னிபிடித்து ஏதேதோ உளற ஆரம்பித்திருக்கிறார்! தி. மு. கழகத்தைத் தாக்கிப்பேசுவதில் விபூதிகளின் வாரிசாக விளங்கி வருகிறார்!

சென்ற வாரம காமராசர் கனம். பொதுக் கூட்டம் ஒன்றில் பேசும்போது "தி. மு. கழகத்தைத் தீர்த்து கட்டிவிட்டேன். அவர்கள விஷயம் முடிந்துவிட்டது; இனி சுதந்திரக் கட்சியை அடக்கி ஒடுக்குவதில் முழு கவனம் செலுத்தப் போகிறேன்" என்று குறிப்பிட்டிருக்கிறார். ஆச்சாரியார் கட்சியை காமராசர் அடக்குவதோ அல்லது காமராசர் கட்சியை ஆச்சாரியார் தீர்த்துக் கட்டுவதோ, ஆகிய இவைகளைப்பற்றி நமக்குக் கவலையில்லை. ஏனெனில் காங்கிரசும்—சுதந்திரக் கட்சியும் ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள் என்பது நமது திட்டவட்டமான எண்ணமாகும்.

தி. மு. கழகத்தை அடக்கி ஒடுக்கி விட்டேன், அவர்கள் கதை முடிந்துவிட்டது என்று காமராசர் கனம் சொல்லுவது வேடிக்கையாகவே இருக்கிறது. இப்பேச்சின் மூலம் அரசியல் துறையில் தாம் ஒரு சோமாரி யென்பதை முதலமைச்சர் தம்மைத்தாமே அறிமுகப்படுத்திக்கொள்கிறார்! அவரின் இந்த "அபிலாஷை"க்கு நாம் குறுக்கே நிற்க விரும்பவில்லை.

ஆனால் தி. மு. கழகத்தை அடக்கிவிட்டேன், இனி அவர்களை பற்றிக் கவலையில்லையென்று சொல்லுவது விவேகமற்ற பேச்சாகும். காமராசரைவிட பன்மடங்கு அறிவாற்றலும் அரசியல் விவேகமும் கொண்ட ஆச்சாரியார் அவர்கள் 1953-ம் ஆண்டு மும்முனைப் போராட்டத்தின் போது (முதலமைச்சராயிருந்துகொண்டு) இப்படித்தான் பேசினார்!

இப்படித்தான் என்பது கூட தவறு. சுயமாக சிந்தித்து தமது மூளைக்கும் இடம் தந்து ஆராய்ந்துபார்த்து கர்ஜித்தார் தி. மு. கழகத்தை மூட்டைப் பூச்சியைப்போல நசுக்கிவிடுவேன்: அவர்களின்கணக்கைத் தீர்த்துக் கட்டிவிடுகிறேன் என்றெல்லாம் வீதிகள் தோறும் கூட்டத்தைக் கூட்டி தப்பட்டை அடித்தார், பரிதாபம்! இறுதியாக அவரே தமது ஆட்சியின் ஆயுளை முடித்துக் கொண்டு மூட்டை முடிச்சுடன் ஓட்டம் பிடித்தார்! தி.மு. கழகம் எவரும் அசைக்க முடியாத கட்டுக்கோப்புடன் வளர்ந்து வருகிறது. இது காடறிந்த உண்மை என்பது மட்டுமல்லாமல் ஆச்சாரியார்கூட மனமார ஒப்புக்கொண்டிருக்கிறார் என்பதைக் குறிப்பிட விரும்புகிறோம்.

ஆச்சாரியாரின் கணக்கே இவ்வளவு அவலட்சணமென்றால் அடியாட்கள் மாடலில் கும்பலைச் சேர்த்துக்கொண்டு காட்டு தர்பார் நடத்தும் காமராசர், கழகத்தை அடக்கிவிட்டேன் என்று பேசுவது அறிவுடைமையாகாது. அவரிடம் மலிந்துள்ள ஆணவ புத்தியும், அரசியல் ஞானசூன்யத்தையுமே எடுத்துக்காட்டுகிறது. எனினும் கழகத்தைப் பொறுத்த வரையில் காமராசர் இவ்வித தப்புக் கணக்கைப் போட்டுவருவது கழக வளர்ச்சிக்கு ஒரு வகையில் வலுவையே ஊட்டும். இறுதியாக தமது தப்புக் கணக்கின் விளைவாக தமது ஆட்சிக்குத் தாமே குழிதோண்டிக் கொள்ளப் போவதைத்தான நாடு காணப்போகிறது.

காமராசருக்கு ஓரளவாவது அரசியல் விவேகம் இருக்குமானால் தமது மாபெரும் தலைவராகிய நேருபண்டிதரே கழகத்தின் மகத்தான சக்தியின்முன் மண்டியிடவேண்டிய நிலை ஏற்பட்டதென்றால் தாம் எம்மாத்திரம் என்பதை உணர்ந்திருப்பார்! அந்த அறிவு தான் பூஜ்யமாயிற்றே! ஆதலால்தான் வெத்துவேட்டுப் பேச்சுக்களைக் கொட்டியளக்கிறார் போலும்!

அடுத்தபடியாக, ஆச்சாரியார் கட்சியைத்தான் அடக்கப் போகிறாராம்! ஆமாம் காங்கிரசுக்குக் கமிஷன்கொடுத்து உதவி வந்த பெரும் முதலாளிகளில் பலர் ஆச்சாரியார் கட்சியைத் தாவி விட்டார்கள் அல்லவா? அதனால் தேர்தல் காலத்தில் பணநாதன் சக்தி குறைந்துவிடுமே என்ற அச்சத்தால் ஆச்சாரியார் கட்சியை அடக்கத் துடியாய் துடிக்கிறார் காமராசர்! இது எப்படியோ தொலையட்டும். முதலாளித்துவத்தின் காலை நக்கிப் பிழைக்கவேண்டிய இழி நிலையிலுள்ள காங்கிரஸ் முகாமின் தலைவரான காமராசர், தி. மு. கழகத்தை அடக்கிவிட்டேன். என்றுபேசுவது கடுகளவு அறிவு கூட இல்லாத வெட்டிப் பேச்சாகும் என்பதை நினைவூட்டுவதுடன் கழகத்தை அடக்கிவிட்டதாகக் கூறும் அவரின் அசகாய சூரத்தனத்தின் அவலட்சணம அடுத்த பொதுத் தேர்தலின்போது அம்பலமாகப்போவதும் உறுதி.

வன்னியசிங்கம் மறைவு

இலங்கை பெடரல் கட்சித் தலைவர்களில் ஒருவரும், இலங்கைத் தமிழர்களின் உரிமைக்காகவும், மொழிக்காகவும் தீவிர பணியாற்றி வந்தவரும் பாராளுமன்ற உறுப்பினருமான திரு. வன்னியசிங்கம் அவர்கள இயற்கையெய்திய செய்திகேட்டு மிகவும்வருந்துகிறோம். அவர்களின் மறைவு பொதுவாக இலங்கைத் தமிழர்களுக்கு பெரும் நட்டமாகும். இலட்சிய உறுதிப்பாடுடன் தொண்டாற்றி வந்த அவரின் பிரிவால் துயருறும் குடும்பத்தாருக்கும் நமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறோம்!

வள்ளுவன் மறைவு

அரசினர் கல்வித்துறை அதிபரும் நமது நண்பருமான திரு. சுந்தரவடிவேலு—காந்தம் ஆகியோரின் அருமை மகன் வள்ளுவன் பத்தாவது வயதில் திடீரென மறைந்தது கேட்டு மிகவும் வேதனைப் படுகிறோம். தங்கள் வாழ்க்கையின் இணையற்ற செல்வமாக மதித்துவந்த ஒரே ஒரு மகனை இழந்து துயருறும் திரு. சுந்தரவடிவேலு அவரது துணைவியார் ஆகியோருக்கு எவ்வாறு ஆறுதல் கூறுவதெனபுரியவில்லை எனினும் அவர்களது துயரில் நாமும்பங்கு பெறுவதுடன், நமது ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறோம்,

பம்பாய் தி. மு. க.

"திராவிடன்" வளர்ச்சி நிதி சிறப்புக்கூட்ட வரவு-செலவு விபரம்

		வரவு	செலவு	
10 ரூ. டிக்கட்	47	470		
5 ரூ. ,,	100	500		
2 ரூ. ,,	535	710		
1 ரூ. ,,	887	887		
நன்கொடை மூலம்	......	50		
'திராவிடன்' நிதி	...		2000	00
போக்குவரத்து	...		67	15
விளம்பரம்	...		35	31
தலைவர்கள் பயணம்	...		108	33
திடல்	...		198	25
பாராட்டுக் கூட்டம்	...		14	87
ஊர்வலம்	...		15	00
வில்லுப்பாட்டு	...		11	56
ஒலிபெருக்கி அனுமதி	...		15	00
மலர்மாலை, கைத்தறி	...		13	00
அஞ்சற் செலவு	...		2	66
நானாவிதச் செலவு	...		53	01
கையிருப்பு	...		13	86
நிலுவை	...		66	00
		2617 00	2617	00

தலைவர்: ஆரியசங்காரன்

எல். என். செழியன்
எஸ். தியாகராசன்
(செயலாளர்கள்)

த. மு. பொற்கோ
(பொருளாளர்)

சு. வள்ளிநாயகம்
வடவைக்குயில்
(தணிக்கையாளர்)

நான் கண்ட அண்ணா

உயர்நிலைப் பள்ளிகளானாலும், கல்லூரிகளானாலும், காங்கிரசு அமைப்பு இல்லாத இடமே இல்லை. காங்கிரஸ் இயக்கத் தலைவர்கள் என்றால் புனிதமானவர்கள் என்று பொதுமக்கள் கருதி வந்த நேரம். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில்படித்துக்கொண்டிருந்த ஒரு மாணவர் பட்டுக்கோட்டையில் நடைபெற்ற ஒரு பொதுக்கூட்டத்தில் நமது அண்ணாவைப்பற்றிய உயர்வுகளை எல்லாம் கூறிவிட்டு "தென்னாட்டின் தளபதி அண்ணா பேசுவார்கள்" என்று கூறினார். நமது அண்ணாவை திராவிடநாடுமூலம் உள்ளத்திலே வைத்திருந்த ஒரு பேரெண்ணத்துடன் 'தளபதி' என்ற சொல்லையும் சேர்த்து மேடையை உற்றுநோக்கினேன. தளபதி என்றசொல்லிற்கு ஏற்ற உருவம் காணப்படவில்லை. ஆனால் நமது அறிஞர் அண்ணா அவர்கள் சொற்பொழிவாற்ற ஒலிபெருக்கியிடம் நெருங்கிய பொழுது மிகக்கட்டாயமாக. தளபதி அண்ணா என்பது இவர் தான் என்பதை என் மனம் ஏற்றுக்கொண்டது. மறுமுறை, அறிஞர் அண்ணாவை அறிமுகப்படுத்திய மாணவரைக் கண்ட பொழுது அவர் தாடியுடன் காட்சியளித்தார். அன்று தாடியுடன் இருந்த அந்த மாணவர் தான் இன்று திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளர்—கழகத்தின்காவலர். நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள். நமது அண்ணாவின் மேடைப் பேச்சு, 'திராவிடநாடு' என்ற ஏட்டின் எழுத்தோவியம்-இவைகளின் மூலமாகத்தான் நான் பெரியாரைத் தெரிந்துகொண்டேன்.

மாணவர் உலகமே தளபதி அண்ணா மூலந்தான் காங்கிரசு கூடாரத்திலிருந்து திராவிடர் இயக்கத்திற்குக் கொண்டுவரப்பட்டது. இன்றைய தி.மு.கவின் தலைவர்களில் பலர் அன்று மாணவர்கள். தனிப்பெருந் தளபதி அண்ணா என்றவுடன் மகிழ்ச்சிப் பெருக்கெடுத்தோடும் மாணவர் சமுதாயத்தை அன்று முதல் காணமுடிந்தது.

1944-ம் ஆண்டு சேலத்தில் ஜஸ்டிஸ் கட்சியின் மாநாடு நடைபெற்ற நேரம். தனிப்பெரும் தளபதி அண்ணா அவர்கள் கொண்டுவரவிருந்த நான்கு தீர்மானங்கள். அதைக் காணத் துடித்தஎனக்கு அனுமதி மறுக்கப்பட்டது என் பெற்றோர்களால்! துணிவுமில்லை மீறிச் ...லுகின்ற பக்குவம் அடையா...தால். மாநாட்டிற்குச் செல்லுக...றவர்களைக்கண்டேன் "பெரியார் வாழ்க" என்ற முழக்கத்துடன். ஆனால் மாநாடு முடிந்துவந்தவர்களைக் கண்டேன், "தென்னாட்டின் தனிப்பெருந் தலைவர் பெரியார் வாழ்க" "தென்னாட்டின் தனிப்பெருந் தளபதி அண்ணா வாழ்க" என்ற முழக்கத்துடன்.

நமது அறிஞர் அண்ணா அவர்களால் கொண்டுவரப்பட்ட தீர்மானங்களால் மாளிகையிலிருந்த இயக்கம் மண்குடிசைக்குக் கொண்டுவரப்பட்டது. தன் சொந்த நலனுக்காக இயக்கத்தினைப் பயன்படுத்திவந்த சுயநல விரும்பிகளான 'சர்'களும் 'ராவ் பகதூர்'களும் நமது அறிஞர் அண்ணாவினால் வெளியேற்றப்பட்டார்கள்.

மிகச்சிறியதோர் கிராமம். நவீன ஊர்திகளின் போக்குவரவு இல்லாத இடம். துணைப்பொதுச்செயலாளர் திரு. என். வி. என். அவர்களை ஊர்வலமாக அழைத்துக்கொண்டு சென்றார்கள் அவ்வூர் பொதுமக்கள். ஆடை அணியத் தெரியாத சிறுவர்கள் கூட அண்ணா வாழ்க! அண்ணா வாழ்க! என்ற வாழ்த்தொலிகளை அவ்வூர்வலத்திடையே எழுப்பிச் சென்றார்கள், அப்பொழுது நான் "இந்தச் சிறுவர்கள் எத்துணை ஆர்வத்துடனும், உணர்ச்சியுடனும் இந்த வாழ்த்தொலிகளை எழுப்புகிறார்கள்......!" என்றேன். அதற்குத் துணைப்பொதுச் செயலாளர் அவர்கள் "ஒரு காலத்தில் நாட்டின் மக்கள் உள்ளங்கள்தோறும் 'காந்தி' என்ற சொல் நிலவிக்கொண்டிருந்தது; ஆனால் இன்று அண்ணா என்ற சொல்மக்களின் உள்ளங்கள்தோறும் நிலவுவது மட்டுமின்றி, அலை ஓசைகளையும் எழுப்பிக்கொண்டிருக்கின்ற காலமிது" என்று கூறினார்கள். நாட்டுமக்களின் உள்ள நிலையினை அறிந்து கூறிய துணைப்பொதுச் செயலாளர் அவர்களை அன்றுவாழ்த்தினேன்.

அறிஞர் அண்ணா அவர்கள் சட்டசபையில் ஒருநாள் பேசிக்கொண்டிருந்தார்கள். 'அண்ணா அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட காலம்போதாது' என்று திரு. எ. கோவிந்தசாமி எம். எல். ஏ. அவர்கள் சபாநாயகரவர்களைப்பார்த்துக்கேட்டார்கள். உடனே சபாநாயகர் திரு டாக்டர். யு. கிருஷ்ணாராவ் அவர்கள் அண்ணா அவர்கள் தேவையில்லாதவற்றைப் பேசிக்கொண்டிருக்கமாட்டார்; அவர் பேசி முடிக்கும்வரை சபை நீடிக்கும்' என்று கூறினார்கள். மாற்றுக்கட்சியினரும் நமது அண்ணாவுக்குக் கொடுக்கின்ற உயர்வினையும், சிறப்பினையும் கண்டு அங்கிருந்த நாங்கள் அனைவரும் மகிழ்ச்சிக் கடலில் ஆழ்ந்துவிட்டோம்.

கும்பகோணத்தில் 1948-ல் 144 சட்டம் விதிக்கப்பட்டிருந்தது. அறிஞர் அண்ணா அவர்கள் அங்கு சிறந்ததொரு போராட்ட முறையினைக் கையாண்டார்கள். ஊர்வலம் ஆரம்பமாகும் முன்னர் மலபார் போலீஸ் நமது தொண்டர்களை அடித்து போலீஸ்வண்டிகளில்ஏற்றிச்சென்றுவிடுவர். இந்த நிலையினைத் தடுக்கும்

எஸ். டி. சோமசுந்தரம்

பொருட்டு அறிஞர் அண்ணா அவர்கள் தெருவொன்றுக்கு ஆறு தொண்டர்களை நிறுத்திவைத்துவிடுவார்கள் அன்றைய போராட்டத்தில் எந்த தெருவில் உள்ள தொண்டர்கள் இறங்குவார்கள் என்று யாருக்கும் தெரியாது. போலீஸ்வண்டி நகரின் பல பாகங்களையும் சுற்றிவரும். போராட்டத்தினைக்காணப் பொதுமக்களும் ஊர்வலம் புறப்படும் இடந் தெரியாமல் போலீசார் சுற்றுவது போன்றே அவர்களும் சுற்றிக்கொண்டிருப்பார்கள். பொதுமக்களைப் பார்த்துபோலீஸ்வண்டியும்,போலீஸ் வண்டியைப் பார்த்து பொதுமக்களும் நகரின் பல பகுதிகளிலும் சுற்றிக்கொண்டிருப்பார்கள் இந்த நிலை நகரில்ஒருபரபரப்பைஉருவாக்கியது. குறிப்பிட்ட நேரம் வந்ததும்அறிஞர் அண்ணா அவர்கள் ஏதாவது ஒரு தெருவுக்கு அங்குள்ள நமது தொண்டர்களுக்கு செய்தி அனுப்புவார்கள்.

போலீஸ் வண்டி அந்த இடம் செல்வதற்குள் தொண்டர்கள் வெகு தூரம் ஊர்வலமாக வந்துவிடுவார்கள் தொண்டர்கள் கடுமையாகத் தாக்கப்பட்டார்கள். ஒரு தொண்டருக்கு நான்கு மலபார் போலீஸ் வீதம் தொண்டர்களை அடித்தார்கள். தொண்டர்கள் அடிபடுவதை நமது அண்ணா அவர்கள் தாங்கிக்கொள்ள மாட்டார்கள். எனவே, போராட்டத்தில்தான் முதல்நாள்செல்லவேண்டுமென்றும், இங்ஙனமே ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு பொதுக்குழு உறுப்பினர்களும் செல்லவேண்டும் என்றும்கூறினார்கள். ஆனால் தலைமை இடத்திலிருந்து அனுமதி கிடைக்கப்படவில்லை.

தொண்டர்கள் தாக்கப்பட்டார்கள். இதைககண்ட நாங்கள் அப்பொழுதைய அண்ணாமலை நகர் திராவிடமாணவர் கழகத் தலைவர் தீனதத்தன் அவர்களுடன் பத்து மாணவர்கள் போராட்டத்தில் கலந்து கொள்ள நமது அறிஞர் அண்ணா அவர்களை அனுமதி கோரினோம். ஆனால், அறிஞர் அண்ணா அவர்கள் மாணவர்கள் அரசியலைத் தெரிந்துகொள்ளுங்கள் அரசியல் கட்சிகள் நடத்துகின்ற போராட்டங்களில் கலந்து கொள்ளாதீர்கள். என்று அறிவுரை கூறி நாங்கள் கும்பகோணத்திலும் தங்கக்கூடாது என்று உத்திரவிட்டுவிட்டார்கள். இந்த அளவுக்கு மாணவர்களைப் போராட்ட சூழ்நிலையிலும் கண்காணித்து வந்தார்கள் நமது அறிஞர் அண்ணா அவர்கள்.

நமது அண்ணா அவர்கள் காஞ்சிபுரம் தொகுதியில் சட்டசபை உறுப்பினராக நின்றார்கள். சர். எ. இராமசாமி (முதலியார்) நமது அண்ணா அவர்களைஆதரித்துப்பேசும்பொழுது நான் 'ஜஸ்டிஸ்' என்ற ஆங்கில ஏட்டின் ஆசிரியராகஇருந்தபொழுது அண்ணா அவர்கள் துணையாசிரியராகப் பணியாற்றினார்கள். நான் ஆங்கிலத்தில் நன்குபேசக்கூடியவன் என்று கர்வத்துடன் இருந்தேன். அண்ணா ஆங்கிலம், தமிழ்இருமொழியிலும் திறமையுடன் பேசக்கூடியவர் என்று தெரிந்தவுடன் நானே சிறிது வெட்கமடைந்தேன். என்னிடத்திலே அரசியல் கற்றுக்கொள்ள வேண்டும் என்று கருதி அண்ணா அவர்கள் ஜஸ்டிஸ் பத்திரிகைக்கு வந்திருக்கக்கூடும். ஆனால் நான்தான் அவரிடம் அரசியல் கற்றுக்கொண்டேன். அண்ணா அவர்கள் அரசியல்பற்றி கூறியதை பத்து ஆண்டுகள் கழித்துத்தான் என்னால் புரிந்துகொள்ள முடிந்தது" என்று கூறினார்கள். சேலம் மாநாட்டுத் தீர்மானத்தை காலம் கடந்து புரிந்து கொண்டதைத்தான் இங்ஙனம் குறிப்பாக திரு. ஏ. ஆர். அவர்கள் கூறியிருக்கவேண்டும்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ்ப்பொதுப் பேரவையின் சார்பில் 23—9—47 அன்று அறிஞர் அண்ணா அவர்கள் திரு. கே.ஏ. மதியழகன் அவர்கள்தலைமையில் சொற்பொழிவு ஆற்றினார்கள். அப்பொழுதெல்லாம் அண்ணா அவர்களை அறிந்திருந்தாலும் மாணவர்களைப்பற்றி பட்டமளிப்புவிழா மண்டபத்தில் என்ன பேசுவார் என்று நாங்களெல்லாம் எண்ணிக்கொண்டிருந்தோம். நமது அண்ணாஅவர்கள் சிறந்ததோர் உரையாற்றியபிறகு, தம்முடை... முடிவுரையில் கீழ்க்கண்டவா... னார்கள். தமிழ்நாடு ப...

நமது அண்ணா

(7-ம் பக்க...

இவர்தான் அண்ணு!

வெண்முகிலும் பனிப்பூச்சும் அழகு செய்யும் லண்டன நகரவாசிகள் அந்த நால்வர். ஆனுல் காவிரிக் கரையிலே மழலை சிந்தியவர்கள்! நான்கு பேரும் நான்கு கலைப்பித்தர்கள். பிறந்த பொன்னுட்டில் தத்தமக்குப் பிடித்த கலைகள் எப்படி இருக்கின்றன என்று அறியவும், தாய்த்திருநாட்டுமண்ணை இன்னெருமுறை மிதிக்கவும் தமிழகத்துக்கு வந்தார்கள்.

அவர்களுடைய இலட்சிய பயணம் இனித்துவிட்டது. மீண்டும் லண்டனுக்கு கப்பலேறி விட்டார்கள்.

கப்பல் லண்டனை அடைந்தது. துறைமுகத்திலே விழிபூத்துக் காத்துக்கிடந்த சிங்காரிகள் அந்த அடலேறுகளை வரவேற்ருர்கள்.

அவன் நாடகப்பித்தன். தன் 'ரோஜா பெல்'ரின் சிவப்பு மேனியில் கரம்போட்டு மெய்சிலிர்தத படி பேசினுன்.

"உயிரே...ஏன் என்னை அப்படிப் பார்க்கிருய்? அத்தான் என்ன இப்படி இளைத்துவிட்டாரே எனறு திகைக்கிருயா...! காரணமுண்டு பனிமலரே...... என் தமிழ்த்திரு நாட்டிலே நடிப்பதைப் பழிக்கிருர்கள்......கூத்தாடிகள் என்று கேலி பேசுகிருர்கள்...அவர்களை எண்ணி வருந்திதான் நான இப்படித் தெனபடுகிறேன்......அங்கேயே புலம்பிக்கொண்டுயிருப்பேன்.........ஆனுல் அத்தகையவர்களுக்கு புத்தி கற்பிக்க நானிருக்கிறேனே தம்பி... நீ ஏன் மனம் வருந்துகிருய் என்று ஆறுதல் கூறினுர் ஒரு நல்லவர்......அவர் நாடகத்துறையிலே ஒரு உயிர்த்துடிப்பை உண்டாக்கியவர்...நாடக சரிதத்தைப் புரட்டிப் பார்த்தேன் அந்தப் பெரியாரின் தொண்டு பளிச்சிட்டது. நம இதயத்தை தொட்டுவிட்ட நாடகக்கலையின் தமிழகத்துக் காவலராய் இருக்கும் அவரை எண்ணி.........அன்பே உனக்கொரு பரிசு இதோ......"

அந்த இளந்தென்றல் காதலன் தந்த அன்புப்பரிசை பெற்றுக்கொண்டு சிணுக்கியபடியே தன் தோழிகளைப்பார்க்கவந்தாள்.

அவளைக் கண்டு, "என்ன லில்லி; இவ்வளவுநேரமா?" என்று குறும்பு பேசினர் அவள் தோழிகள்.

"இதோ பார்த்திர்களா? இது அவர் 'அளித்த பரிசு" என்று தன் கரத்திலேயிருந்த வெள்ளிப் பெட்டியைக் காட்டினுள் லில்லி.

"என் காதலரும் எனக்கு ஒரு பரிசு தந்திருக்கிருர். அதுவும் இதைப்போன்றே ஒரு வெள்ளிப் பெட்டி தமிழ்மொழியில் புதிய ...ப்பையும், எளிமையையும் ... மொழிப்பற்றைத் தழை...ராம். அங்கொரு ...ரை நினைத்துதான் எனக்கும் அந்தப் பெட்டியை பரிசகக அளித்திருக்கிருர் 'அவர்"

"என் அன்பரும் தனக்கு இஷ்டமான பேச்சுக்கலையைக் கூறி அது தலைநிமிர்ந்து தமிழகத்தில் தான நிற்கிறது என்று மகிழ்ச்சியோடு உரைத்து அந்த மகிழ்ச்சியின் சின்னமாக இதைப்போலவே ஒரு வெள்ளியில் பெட்டியை பரிசளித்திருக்கிருரே..."

மீரா முல்லைக் குறுநகை காட்டி இப்படிக் கூறிவிட்டு லாலியைப் பார்த்தாள். லாலி தலைகுனிந்து இருந்தாள்.

"என்ன லாலி உனக்கொன்றும் தரவில்லையா உன்காதலர்?"

லாலி பேசவில்லை. அவளுககு அழுகை வரும்போல் இருந்தது.

"லாலி..."—அவளுடைய அத்தானின் வெண்கலக்குரல் அவள் செவிகளிலே சென்று தேனுகப் பாய்ந்தது. அவள் மிடுக்கோடு அவனை நிமிர்ந்துப் பார்த்தாள்.

"லாலி...... மறந்துவிட்டேன் சமுதாய சீர்திருத்தத்தையும் பொதுப் பணியினையும் தமிழ் மண்ணில் ஒரு மகான் அமைதியாகச் செய்து வருகிருர். அவர் முறை எனக்கு மிகவும் பிடிக்கிறது. அப்படித்தான் சமுதாயத்தை திருத்தமுடியும்...... அவரைக்காணக்கிடைத்த களிப்பில் உனக்கொருபரிசு கொண்டு வந்திருக்கிறேன இந்தா பெற்றுக் கொள்"

அவன் தன்கரத்திலே இருந்த வெள்ளிப் பெட்டியை அவளிடம நீட்டினுன். அவள் முகமலர் சிரித்தது.

அந்த நான்கு பூவையரும் ஒரே மாதிரியான வெள்ளிப் பெட்டிகளைப் பரிசாகபெற்றதைவியந்து என்னதான் இருக்கிறது என்ற ஆவலில் அவற்றை திறந்தார்கள். எல்லா பெட்டிகளிலும் ஒரு திருஉருவம் கனிவானப் பார்வையைக் காட்டிற்று.

லாலி தன் அத்தானைப்பார்த்து "அத்தான் இவர்தான்........." என்று நீட்டினுள்.

"ஆமாம்...இவர்தான் அறிஞர் அண்ணு" என்ருன் அவன்.

-மாண்மகிழன்

"தாய்நாடு"

இதழ் குறித்து ஒரு வேண்டுகோள்

அன்புடையீர்,

வணக்கம். எனக்கு ஏற்பட்டுள்ள தவிர்க்கமுடியாத சில முக்கிய அலுவல்கள் காரணமாக, செப்டம்பா 17-ந் தேதி தொடங்கப்பட இருந்த "தாய்நாடு" இதழ், டிசம்பர் மாதத்திலிருந்து வெளிவரும் நிலை ஏற்பட்டுள்ளது. தயை கூர்ந்து இந்தக் காலதாமதத்துக்கு மன்னிக்குமாறுவேண்டுகிறேன்.

அன்புள்ள

டி. கே. சீனிவாசன்

முதல் பக்கத் தொடர்ச்சி ....

வாரூர் நகரசபையின் மாடியிலிருந்த படிப்பகத்துக்குப் போய், எல்லாப் பத்திரிகைகளையும் படிப்பதுபோல் படிப்பேன். படிக்கப் படிக்க அதில் கூறப்படும் கொள்கைகளைவிட, தமிழ் எனக்கு இனித்தது! தமிழுக்காக படிக்க ஆரம்பித்து, கருணாநிதி போன்றவர்களைக் கண்டாலேபாபம்! என்கிற நிலைமாறி "பார்க்கலாம். பேசவும் பேசலாம், பயமில்லை" என்கிற கட்டம் வந்தது. கொஞ்சங் கொஞ்சமாக நானும் கருணாநிதி அவர்களும் சிரிப்பது—பேசுவது--நலமா என வினவுவது இப்படி ஆரம்பித்தோம்! தன்னுடன் யார் பழகினுலும் அவர்களைத் தன் வலையில் வீழ்த்தக்கூடியவர் கருணாநிதி என்பதுதான் உங்களுக்குத் தான் தெரியுமே!

அனலிடை சிக்கிய மெழுகு போல், கதருடையும் தமிழாசையுமாகத் தத்தளித்துக் கொண்டிருந்த என்னை, திருவாரூரில் நடைபெற்ற "சந்திரோதயம்" நாடகத்துக்கு, வற்புறுத்தி, இலவ்ச டிக்கட் வந்திருப்பதாகத் தானே காசு கொடுத்து டிக்கட் வாங்கி இழுத்துக் கொண்டு போனுர். சந்திரோதயம் கண்டேன். என் மனதிற்குள்ளும் அண்ணு என்ற சூரிய ஒளி வெகு வேகமாக நுழைவதை உணர்ந்தேன்! பிறகு............? அதே ஆரூரில் கருணாநிதி தலைமையில் நான் செயலாளராக ஆனதும் அவர் நடத்தியநாடகத்தில் வேடம் போட்டதும் பெரிய கதை.

அண்ணுவிடம் ஆழ்ந்த ஆசையும்பற்றும எனக்கு, அப்போதே அரும்பிற்று. ஆனுலும, வருவதாகச் சொல்லிவிட்டு அவர் கூட்டத்திற்கு வராமல் போவது திராவிடகழக வேலைகளிலே உற்சாகம் கொள்ளாமலிருப்பது போன்ற காரியங்களைப் பார்க்கப் பார்க்க எனக்கெல்லாம் பெரியார் அவர்கள் மீதுள்ள "பக்தி" தான் அதிகமாகியது. ஆனுல் அதுவும் தவறு என்பது, குடந்தையில் நடந்த ஒரு மாநாட்டுக்குப் பிறகு எனக்குப் புரிந்தது.

மதுரை கருப்புச் சட்டை மாநாடு கொளுத்தப்பட்ட மறுவாரத்திற்கெல்லாம் குடந்தையில் மாநாடு. நான் அப்போது பள்ளி யிறுதித் தேர்வு எழுதிவிட்டு, "குடியரசு" அலுவலகத்தில் இருக்கிறேன். மாநாட்டுக்குப் போய்விட்டு பெரியார் வந்தார்கள்! வந்ததும் போய் விசாரித்தேன், எப்படியிருந்தது மாநாடென்று. பெரியார்சொன்ன முதல் வார்த்தையே "நல்லாத் திட்டிப்போட்டேனுங்க! குள்ள நரிப் பசங்க.........ன்னு சொல்லிப்போட்டேன். பின்னே என்னுங்க ஏன்கருப்புச் சட்டை போடாமே இந்த அண்ணுதுரை சின்னதம்பியெல்லாம் மேடைக்கு வரணும்?" என்பதுதான் எனக்கு சொரேர் என்றது! அண்ணுமீது அதிருப்தி உண்டே ஒழிய, "அவர் கழகத்தைவிட்டுப் போய் விட்டால் பிறகு?" என்கிறபயம் நிரம்ப இருந்தது!!

அய்யாவின் போக்கைக் கண்டதும், அதிர்ச்சியோடு வேதனையாகவும் இருந்தது. அங்கேயிருந்த இரண்டு மாதங்களில் பெரியாரின் உள்ளம் ஓரளவுக்கு எனக்குப் புரியவந்தது. ஒரு பக்கம் பெரியார்! இன்னெரு பக்கம் அண்ணு! இப்படியொரு, விபரமறியாத குழப்பம். இரண்டு கண்களில் எதையிழப்பது? எதுவும் போய்விடக் கூடாதே, என்கிற திகில். பிறகு, நான் அண்ணுமலை நகர் சென்றேன் படிக்க. இடம் தேடி சென்னை வந்தேன் 'விடுதலை' பெரியதாளானதும், என்னை அழைத்தார்கள். போய் பணிபுரிந்துகொண்டிருந்தேன்.

கழகத்திலேயே ஆசைக்கும் அச்சத்துக்கும் ஊசலாடிய கட்டமாகும் இது! நமது என். வி. நடராசன் போன்றவர்கள் அய்யாவுக்கும் நல்லவர்களாய், அண்ணுவுக்கும் வேண்டியவர்களாய் ஒட்டுப்போடப் பெரு முயற்சிசெய்து கொண்டிருந்த கட்டம். 'விடுதலை' யில் இருந்ததால் அய்யாவின் உள்ளத்தையும் போக்கையும் நன்ருகப் புரிந்துகொள்ள முடிந்தது.

ஒரு சமயம் சென்னையில் மே தின விழா, மிகச் சிறப்பாக நடந்தது; அதிலே கலந்துகொண்டு அண்ணு ஆற்றியசொற்பொழிவு அருமையான ஒன்ருகும். அதை அபபடியேஎழுதி, 'விடுதலை'யில் போடக் கொண்டுவந்தார் என். வி. என். அவர்கள். போட்டும் விட்டோம், பிரமாதமான தலைப்பிட்டு அதோடு விட்டிருக்கக் கூடாதா? பத்திரிகை அழகாயிருக்கவேண்டுமென்கிற ஆசையால், காஞ்சி மணிமொழியார் அவர்கள் நடத்திக் கொண்டிருந்த "போர்வாள்" அலுவலகத்துக்குச் சொல்லியனுப்பி, அண்ணுவின் பிளாக்கை இரவல் வாங்கி வரச்சொல்லி அதையும்போட்டு விட்டோம் நானும் அப்போது என்கூடயிருந்த பூ. கணேசன் எம். ஏ. அவர்களும்!

மறுநாள் ஐயா முகத்தைப் பார்க்கவேண்டுமே? நேரடியாகக் கேட்கவும் சங்கடம். அதனுல் வந்து எங்களருகில் உட்கார்ந்துமே, இப்படி அப்படி பேப்பரை எடுத்துவைத்துக்கொண்டுபார்த்தார்' பிறகு, தன்னுலும் பொறுக்கமுடியாமற் சொன்னுர், "பெருமாள சோத்தைத் தின்றுவிட்டு, பெருமாளுக்குத் துரோகம் செய்கிருனக!" என்று. அந்தச்சொல், உள்ளபடியே, என் மனதிலும் நண்பர் கணேசு மனதிலும் ஆழப்பதிந்தது! நாங்கள் ஒன்றும சோற்றுக்கு வீங்கிப்போய், விடுதலைக்குப்போகவில்லை.! விபரமறிந்தவர்கட்குத் தெரியும், எங்களுடைய இல்லத்திலே தினசரி எத்தனை பேருக்கு சோறு கிடைக்கிறதென்று.

அய்யா சொன்ன அந்த வாசகம், பெரியாருடைய மனதில் "தான்" இருக்கிறதே ஒழிய 'கழகம்' இல்லை, என்கிற உண்மையை உணர்த்திற்று. எப்படியோ, அண்ணு, பாரதிதாசன் ஆகியோர் மீது பெரியாருக்கு ஒரு எரிச்சல் ஏற்பட்டு, மிகப் பெரிதாக வளர்ந்துகொண்டிருந்தது. இந்த புகைச்சல் அடங்காதா! தந்தையும் தளபதியும் ஒன்ருகமாட்டார்களா!! என்று

இயக்கத்திலிருந்த நல்லவர்கள் மிகமிக ஆசைப்பட்டார்கள். இப்படியொரு ஆசையிருப்பதைப் பெரியாரும் புரிந்துகொள்ளாமலில்லை. 'மாஸ் சைகாலஜி' தெரிந்தவராயிற்றே பெரியார்!

இந்தி எதிர்ப்பு வந்தது. அண்ணாவைப் போராட்டத் தளபதியாக்கினார், அய்யா. வீறுகொண்டெழுந்த அப்போராட்டத்தின்போது, காலையில் திருவல்லிக்கேணியிலிருந்து கிளம்பி அட்டையைப்பிடித்துக்கொண்டு இந்து தியாலாஜிகல் பள்ளிக்குப் போய் "இந்தி ஒழிக!" என்று மறியல் செய்துவிட்டு, வெந்த வெய்யலில் அலமேலு அப்பாதுரை போன்ற தொண்டர்கள், படாத பாடுபட்டுக் கொண்டிருந்தார்கள். இந்த அறப்போரைமுன்நிறுத்தி விடுதலையின் மூலம் பணவசூல் ஆரம்பமாயிற்று. பணம்வசூலாக வசூலாக, அறப்போரின் சுருதியும் இறக்கிவிடப்பட்டது. இது பொறாததால், அண்ணா மீண்டும் ஒதுங்கலானார். அய்யா, பெட்டிச் சாவியைக் கையில் கொடுத்துவிட்டேன்!" என்று ஏதோ கட்சியை அண்ணாவிடம் ஒப்படைத்துவிட்டது போல், ஒரு கருத்தைப் பரப்ப, ஈரோட்டில் நடைபெற்ற ஒரு மாநாட்டைப் பயன்படுத்தினார். அந்தப் பேச்சினை விடுதலையில் போடும்போது உள்ளபடியே அய்யாவின் மனம மாறிவிட்டது, என்றே நாங்கள் எல்லாம் மகிழ்ந்தோம்! ஆனால். அந்த வார, 'திராவிடநாடு' இதழிலேயே விளக்கமொன்று வந்தது:

"பெட்டிச்சாவியைக்கொடுத்ததாக பெரியார் பேசியதால், பலர் திராவிட கழகத்துக்கு நான் தலைவனாக்கப்பட்டுவிட்டேனென்று சந்தேகப்படுகிறார்கள். எப்போதும் போல தி. போ. வேதாசலம் தான் நிர்வாகத்தலைவர் இதில் ஒன்றும் மாற்றமில்லை," எனறு. சாவியைக் கொடுப்பதாக பல்லாயிரக்கணக்கான மக்கள் மத்தியில் அய்யா சொன்னாரே தவிர, சாவியையும் தரவில்லை! பெட்டியையும் தரவில்லை! மாநாட்டில் மிச்சப்பட்ட பத்தாயிரத்துக்கு மேற்பட்ட பணத்தோடு, பெட்டியும் சாவியும். அய்யாவின் மீரான்சாகிபு வீட்டில்தானிருந்தது.

இதுபோன்ற சமயங்களிலெல்லாம, அண்ணா, தன்னுடைய மனநிலையை விளக்க திராவிட நாடு ஏட்டில், மறைமுகமான கட்டுரைகள் பலவற்றைத் தீட்டினார் அவைகளில், மறக்கமுடியாதவை "ராஜபார்ட் ரங்கதுரை", "இரும்பாரம்", "மரத்துண்டு" முதலியனவாகும். இபபடிப்பட்ட கட்டுரைகளைப் படிக்கப்படிக்க என் போன்றோருக்கு வேதனையாக இருக்கும். கொஞ்சம் கொஞ்சமாக அண்ணாமீதுமீளாதபழியை வீச, அய்யா முயன்றுகொண்டிருந்தார்! அரசியலுக்கு லாயக் இல்லாதவர் என்பதைக் காட்ட, அவர், எடுத்துக்கொண்ட முயற்சியில் ஓரளவுக்கு வெற்றியும் கண்டார், எனலாம். அதே சமயத்தில் அண்ணாவும் தன்னுடைய மனநிலையை ஏட்டின்மூலம் வெளிப்படுத்திக் கொண்டிருந்தார்.

இது கட்சியின் மேல்தட்டிலிருந்தோருக்கு மட்டுமே புரியும். அய்யாவின் சொல்லோ, பாமர மக்கள் வரையில்போய், அண்ணாவின்மீது ஒரு அதிருப்தியை உருவாக்கிக் கொண்டிருந்தது. இப்படிப்பட்ட சூழ்நிலையின் போது, என்னைப் போன்றவர்களுக்கு, ஒருசமயம் பெரியாரின் மீதும் இன்னொருசமயம் அண்ணாவின் மீதுமாக விரக்தியும் சோகமும் ஏற்பட்டுக்கொண்டிருந்தது. ஆனால், அய்யா கழகத்தைப் பொதுச் சொத்தாகக் கருதாமல் அதையும் ஒரு 'ஜமீன்' போல எண்ணுகிறார் என்பது மட்டும் என்போன்றோர்க்குத் தெளிவாக தெரிந்தது.

அந்தச்சமயம்தான், அப்போது 'விடுதலை'யில் காஷியராகயிருந்த கே. கோவிந்தசாமி அவர்கள், ஒரு நாள் பரபரப்போடு ஓடிவந்து அய்யாவின் திருமணச் சேதியைச் சொன்னார்! கோவிந்தசாமிக்கு அண்ணா என்றால், பிடிக்காது, அப்போது. அதேசமயம் பெரியாரின் இப்போக்கும் பிடிக்கவில்லை. குருசாமி அவர்கள் அலுவலகத்திலிருந்த தன் புத்தகங்களையெல்லாம் எடுத்துக்கொண்டு, அப்போதே அய்யாவைத் தலைமுழுகிவிட்டவர்போல பேசிவிட்டு, வீட்டுக்குப்போனார்.

ஏற்கனவே கலங்கிப் போயிருந்த பூ. கணேசனும் நானும் இடிவிழுந்த நிலை பெற்றோம்! "சரி இருந்திங்கே அநீதியிடை வாழவேண்டாம? முடிந்தது பொது வாழ்வு," என்று நானும் அவரும் பேசிக்கொண்டு, விடுதலைக்கு முழுக்குப் போட்டுவிட்டுப் புறப்பட்டோம். நான் அப்போது செம்புதாஸ் தெருவில், ப. வாணன், செழியன் ஆகியோர் இருந்த அறையில் தங்கியிருந்தேன. எதிர்காலம் பற்றிய எண்ணத்தோடு, அங்கே போய்ப் படுத்தபோது, வாணன் என்னை அழைத்தார், அண்ணாவிடம். "அண்ணா என்ன செய்யப்போகிறார் வாணன்! தன் வேலையுண்டு என்று போய்விடுவார். கழகம் ஒழிந்தது அவ்வளவுதான்," என்று பொருமினேன். அண்ணா ஒரு உல்லாச மனிதர், என்று அய்யாமூலம் ஏற்பட்டிருந்த உள்ளத்துணர்வு, என்னிடமும் இருந்தது. நான் இது நாள்வரையில் அண்ணாவிடம் அதிகம் நெருங்கியோ, இணைந்தோபழகியதுகிடையாது! அவர் எனக்கு தூரத்து நிலாவாக யிருந்தார்! வாணனின் பிடிவாதத்தின் பேரில் கோவிந்தப்பநாயக்கன் தெருவிலுள்ள டபிள்யூ. கே. தேவராசன் இல்லத்துக்குப் போனேன். எல்லாத் தலைவர்களும் ஏதாவது ஒரு முடிவெடுக்க வேண்டுமென்று இரவு பகலாய் பாடுபட்டுக் கொண்டிருந்தார்கள். அண்ணா ஆட்டக் காய்களை நகர்த்திக் கொண்டிருந்தாரே ஒழிய ஒரு முடிவும் செய்யவில்லை.

அச்சமயம் டி. எம். பார்த்தசாரதி முயற்சியால், "மாலைமணி"எனும் தினசரி இதழ் தொடங்கப்பட்டு, 'திராவிடநாடு' ஏட்டில் துணை ஆசிரியராக இருந்த நெடுஞ்செழியன் அவர்கள் சென்னை வர நேரவே, நான் திராவிடநாட்டுக்கு

(கடைசிப் பக்கம் பார்க்க)

நான் கண்ட அண்ணா

மூன்றின் பெருமையைப் பெற்றிட்ட ஒரே நாடு—நம் திராவிட நாடே! முக்கடல் கொண்ட பெருமையும்—முக்கோடி ஆண்ட அருமையும் முத்தமிழ் வளர்க்கும்பெற்றியும்—மும்முடிச் செங்கோலேற்ற முங் கொண்ட ஒரே நாடு—நம் தாய்த் திருநாடே!

மும்மலையும் முந்நாடும் முந்நதியும் முப்பதியும்
மும்முரசும் முத்தமிழும் முக்கொடியும்—மும்மாவும்
தாமுடைய மன்னர் தடமுடிமேல் தாரன்றே
பாமுறைதோ வள்ளுவர்முப் பால்'

என முப்பாலின் பெருமையை மூன்றெண் கொண்டே புகழ்கின்றார் சீர்த்திவளர் சித்தலைச் சாத்தனார் என்னுஞ் செந்தமிழ்ப் புலவர். தமிழ் என்னும் மூவெழுத்துக் கோர்வைக்கு இனிமை எனும் பொருள் கொண்ட பெருமை உடைய இடம்—இத்திராவிடம்.

இத்தகு இலக்கிய எழிலுடை நாடு—தன் மாண்பிழந்து வந்தார்தம் இணையடிகீழ் வதிகின்ற நிலைகண்ட அண்ணா அவர்கள் புண்ணான உள்ளத்தினரானார்.

'சிங்களம் புட்பகம் ஆகிய தீவு பலவினும் சென்றேறி—அங்குத்
தங்கள் புலிக்கொடியும் மீன்கொடியும்
நின்று சால்புறக் கண்டவர் தாய்நாடு'

நாம்படும் பாட்டைவிடக் கொடுமைப்படுவது கண்டு கொதித்தெழுந்தார். கொள்கை முரசொலித்தார்—தென்றற் பேச்சால் திராவிடர் உள்ளத்தைத் தடவினார்—உறங்கியிருந்தோர்உறுமுஇன்ற புலிகளென உடல் சிலிர்த்து எழுந்தார்—தாய்நாடு காக்கத் தலையையும்—விலையாக்கத் துணிந்தனர்,

அடிமைகளாய்—ஊமைகளாய்—மோழைகளாய்—பொம்மைகளாய்—சோற்றுமலைகளாய் இருந்தவர்கள் சொந்த நாடு காக்கச் சேனையொன்று தேவையென முழக்கமிட்டனர். இவ்வேளையில் நாடுகாத்தல் எனும் 'மாண்புடை எண்ணத்தை' மறவழியிற் செலுத்தி வெற்றிகாண விழைந்திருப்பர் வேறு தலைவராக இருந்திருந்தால்......ஆனால் ஈரோட்டுத் தணலில் புடமிட்டக் காஞ்சிப் பொன்னோ அறவழியையே நாடிற்று ஆம்! அத்தகு பொறுமைப் பொட்டகந்தான் அறிஞர் அண்ணா!

எயிற்பதியென இலக்கியம் போற்றும் ஏற்றம் வளர் எழிற்பதியே கச்சிமாநகரமாகும். செந்தமிழ் வல்ல சேக்கிழார் பாடல் பெற்ற இந்நகர்தாம் 'நற்றமிழ்ப் புலமையும் நாவன்மையும் ஒருங்கே வாய்ந்த' நம் அண்ணா அவர்கள் நன்னகராரும். 'உச்சிமேற் புலவர் கொள்ளும்' உயர் குணத் தோன்றலான நம் அண்ணா அவர்கள் 'யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையம்' எனும் பொதுநோக்குடையவரெனின் 'கொல்லன் தெருவில் ஊசிவிற்ற கதை'யை ஒக்கும். 'எச்சுவை பெரினும் வேண்டேன்—எழிற்றாவிடத்தையன்றி' என முழக்கி ஆற்றிய பணியும்—முன்னேற்றக் கழகஞ் சமைத்து முத்தமிழ் வித்தகர்களை வெளிக்கொணர்ந்த பண்பும் உதயசூரியனைப் போன்று ஊரறிந்த ஒன்றாகும்!

பொன்னனைய குணங்கொள் அண்ணாவின் 'பொன்விழா'வென்னும் பூரிப்புச்சேதிகேட்டு பொங்கி மகிழ்கிறது நாடு. எண்ணிலாத் தம்பிமார்க்கு கண்ணனையரான அண்ணாவின் வண்ணவிழா அறிஞர் உலகின் எண்ணவிழா! ஆம்; தேன் தமிழின் திருவிழா—திருவிடரின் பெருவிழா!

ஆகலின், அக்குணக்குன்றை,

அமைதிக் குன்றே அறிவின் தொகுப்பே!
ஆற்றலி னூற்றே! அருங்குணக் கடலே!
இன்முகங் கொண்டு இயம்புத் திருவே!
ஈரநெஞ் சுடைய எளிமை வாழ்வே!
உழைப்பதற் கயரா உத்தமக் குணத்தோய்!
ஊக்கங் குறையா துழைக்கும் பண்பே!
எதையுந் தாங்கும் உளமே கொண்டோய்!
ஏழையர்க் கிரங்கும் எழிற்குணப் பிறப்பே!
ஐம்பதின் விழாவை அழகுறக் காண்போய்!
ஒழுகுதற் இனிய உயர்பண் புடையோய்!
ஓதி வுணர்ந்து உரைத்திட விழைவோய்
ஔடத அறிவுரை அளிப்பாய் எமக்கே!

என வாழ்த்தி—விடுதலைத் தானையில் பணியாற்றிட மேலும் மேலும் ஊக்கம் பெறுவோமாக.

"வாழ்க அறிஞர்! வாழ்க அண்ணா!
வாழ்க வாழ்க வண்டமிழ் போல"

-மயிலை. முத்தெழில்

சென்ற இதழில்:

யோகானந்தரின் மாளிகையில் யோகானந்தரும் கர்ணபூபதியும், விக்கிரமனையும், சுந்தரியையும் தீர்த்துக் கட்ட தீட்டமிடுகின்றனர். அதற்கேற்ப அக்காரியத்தை நிறைவேற்ற கர்ணபூபதியும் புறப்பட்டுவிட்டான்.

அச்சமயம் சுந்தரியும் விக்கிரமனைப் பழி வாங்கும் பொருட்டு வந்திருக்கிறாள். சுந்தரியை தனிமையில்கண்ட கர்ணபூபதி அவளைத் தீண்டுகிறான். அங்கேவந்த துர்ஜயன் கத்தியால் கர்ணபூபதியைக் குத்துகிறான்.

விவரம் அறிந்த சுந்தரி ஆஸ்ரமத்திற்கு தீ வைக்க உத்திரவிட்டு துர்ஜயனை அரண்மனைக்கு போகும்படியும் தான் விக்கிரமனை பார்த்துவருவதாக் கூறுகிறாள்.

★

காட்சி 38

இடம்: மார்த்தாண்டன் அரண்மனை (முல்லை நாடு)

நிலை: மார்த்தாண்டன் மதுவருந்திய மயக்கத்தில் ஆசனத்தில் சாய்ந்து கிடக்கிறான. அச்சமயம் மலலிகா போதை யூட்டும் வகையில் உடையணிந்து வருகிறாள். அவளைக் கண்ட மாரத்தாண்டன்.

மா: வா மல்லிகா! ஏது இரண்டு மூன்று நாட்களாக இப்பக்கமே காணோம்?

மல்: எல்லாம் உங்களைப்பற்றியே சிந்தனை தான்!

மா; என்னைப் பற்றியா...... இருக்கும்... இருக்கும்! ஏனென்றால் என் இன்பக் கிளி யல்லவா நீ! என்ன சிந்தித்தாய்கண்ணே என்னைப்பற்றி......!

மல்: எல்லாம் உங்களுடைய வருங்காலம் நிம்மதியற்றதாய் போய்விடாமல் எந்தவித சங்கடமும் உங்களை அண்டாமல் நிம்மதியாக இருக்கவேண்டுமே என்பதைப் பற்றிதான்!

மா: ஆகா......! என்ன அக்கறை! நீயல்லவா என் வாழ்வை வளப்படுத்தும் இன்ப ராணி!

...: ஆமாம்... நாங்களெல் ...ன விசுவாசமாய் இருந்தாலும் இன்பத்திற்கு மட்டும் தானே ராணிகள்!

மா: இன்பமே...! என்னைச் சந்தேகிக்கிறாயா? நான் மனது வைத்தால் உன்னை இம் மண்டலத்தின் 'பட்டத்து ராணி'யாக்க முடியும் என்றால்!

மல்: உண்மையாகவா......? எதிர்ப்புகள் ஏராளமிருக்குமே நாட்டில்!

மா: எனக்குப் பிறகு யார் இருக்கிறார்கள் மல்லிகா! சுந்தரியோ எந்த அரச குமாரனை மணந்து எங்கு வாழப் போகிறாளோ? அதற்குப் பின் நாம் தானே?

மல்: இப்போது அப்படித்தான் கூறுவீர்கள் நாட்டில் எதிர்ப்புக்கள் கிளம்பியதும் பெட்டிப் பாப்பாகிவிடுவீர்கள்.

மா: உனக்குச் சந்தேகமே வேண்டாம். என் சந்தோஷத்திற் குரியவளே! அது சரி உன் ஆட்டத்தைக் கண்டு நெடு நாட்களாகிவிட்டன; என் மனமும் ஏனோ நிம்மதியில்லாமல் இருக்கிறது......!

மல்: தங்களை என்றென்றும் நிம்மதி காணச் செய்யத்தானே இப்போது ஓடோடியும் வந்திருக்கிறேன்!

மா: ஏதோ......உன் அங்க அசைவிலே என் அகம் மகிழட்டும்—ஒடியும் இடையிலே துயரம் மறையட்டும்—நீ சதிராடும் போது கிளம்பும் சதங்கை ஒலி என் சஞ்சலத்தை நீக்கட்டும்! ஆடு கண்ணே ஆடு! என் ஆசை தீர ஆடு!

(மல்லிகா நடனமாடிக் கொண்டே பாடுகிறாள். நடனம் முடிய மதுக் கிண்ணத்தை எடுத்து மார்த்தாண்டனின் முன்பு நீட்டுகிறாள். அவனும் அமிர்தத்தைக் கண்டவனுடைய ஆவலோடு அதைவாங்கி பருகும் சமயம் திடீரென்று துர்ஜயன் தோன்றி)

துர்; மகாராஜா! நிறுத்துங்கள்.........அதைக் குடிக்காதீர்கள்! அதில் விஷம் கலந்திருக்கும்!

மா: என்ன...! விஷமா......? மல்லிகா எனக்களிக்கும் மதுவிலா விஷம்? பைத்தியக்காரா... என்ன உளறுகிறாய்?

துர்: இல்லை மகராஜா......! உங்களைக் கொல்ல சதி நடக்கிறது!

மா: என்ன......சதியா......?

துர்; ஆமாம் அரசே! அந்த அலஙகோலத்தைக் காண வேண்டுமானால், இந்த மதுவை யாரையாவது அருந்தச் செய்து பாருங்கள்!

மல்: (கோபத்துடன்) சற்று முன்பு சொன்னேனல்லவா? நாங்கள் என்னதான உண்மையாக நடந்தாலும உங்கள் கண்களுக்குப் பொய்யாத்தான் தோன்றும்!

துர்: இல்லை மல்லிகா......! இவன்............

மல்: இவன் சொல்லுகிறான் விஷம் கலந்திருப்பதாக அதைக் கேட்டவுடன் தங்கள் உள்ளம் உயிர் மேலிருக்கும் ஆசையை நினைத்து வருந்துகிறது! இல்லையா?

மா: இல்லை கண்ணே......! எனக்காகவே வாழும் நீ இவ்விதத் துரோகத்தை கனவிலும் நினைப்பாயா?

மல்: நினைப்பாளா...... மாட்டாளா என்ற சந்தேகச் சாயல் சிந்தனைக்கிடையே சிறகடித்துக் கொண்டிருக்கிறதா......? உங்களுக்கேன் வீண் சந்தேகம்! இதோ......! நானே அதைப் பருகுகிறேன்!

(என்று சொல்லி எடுத்து அந்த மதுவைக் குடித்து விடுகிறாள்)
போதுமா......? சந்தேக இருள் மறைந்தா......?

மா: கண்ணே......! மாசில்லா மாணிக்கம் நீ......? உனக்கு மாசு கற்பித்தான் இந்தக் கசடன்! டேய் அற்பனே! என் மல்லிகாவின் மீதா பழி சுமத்தப் பார்க்கிறாய்; பாதகா!

துா: இல்லை...... இல்லை... நான் சொல்வது அத்தனையும் உண்மை மகாராஜா; உண்மை.

(இச்சம்பவங்களை மறைவிலிருந்துப் பார்த்துக்கொண்டிருந்த யோகானந்தர் வந்துக்கொண்டே)

யோ: எதடா உண்மை; எத்தனே! இழுத்துச் செல்லுங்கள் இந்தப் பழி பாவத்திற்கஞ்சா கொடியவனை!

துர்: எல்லாம் இந்தப்படுபாவியின் ஏற்பாடுதான் மகாராஜா! இவனை நம்பாதீர்கள்... இவனை நம்பாதீர்கள்!

(வீரர்கள் வந்து பிடித்து இழுத்துப் போகிறார்கள் துர்ஜயனை)

மா: பைத்தியம் போல் தெரிகிறது.

யோ: பித்தம் அதிகமாகி விட்டதோ என்னவோ; அது தான் இப்படிப் பிதற்றித்திரிகிறான்!

(என்று சொல்லிக் கொண்டே மல்லிகாவிற்கு கண்சாடைகாட்ட அவளும் புரிந்துக் கொண்டவள் போல, தன் கணையாழியிலிருந்த விஷத்தை மதுக் கிண்ணத்தில் கொட்டுகிறாள. திடீரென்று திரும்பிப் பார்த்த துர்ஜயன இதைக் கண்டுவிடுகிறான். மதுக் கிண்ணத்தில் மதுவை நிரப்பி திரும்பவும் மார்த்தாண்டனுக்குத் தரும் சமயம் வீரர்களை உதறித் தள்ளிவிட்டு துர்ஜயன் ஓடிவந்து)

துர்: மகாராஜா... அருந்தாதீர்கள்...! விஷத்தை இப்போது தான் கலந்திருக்கிறாள் இப்பாதகி.

மா: திரும்பவுமா ஆரம்பித்துவிட்டாய் உன் உளறலை?

யோ: (வீரர்களைப் பார்த்து) தடியர்களே! ஏன் விட்டீர்கள் இழுத்துச் செல்லுங்கள்.

மா: கொண்டுபோங்கள் இக்கொடியவனை...!

(வீரர்கள் துர்ஜயனை நெருங்கிவர துர்ஜயன் வாளை உருவி அவர்களை விரட்டிவிட்டு)

தங்கவயல்-லோகிதாசன்

காலம் கனியும்வரை காத்திருப்போம்

எட்டுமாத கர்ப்பிணியாக இருக்கும் ஒரு தாயைப் பார்த்து மகன், 'எப்போது எனக்குத் தம்பி பிறப்பான் ?' என்று நான்கு பேர் மத்தியில் கேட்டால், தாய் என்ன பதில் சொல்வாள் ? மகனுடைய கன்னத்தைக் கொஞ்சம் அன்பாகக் கிள்ளி 'தம்பி பிறக்கிறபோது பிறப்பான், போ' என்பாள். தனியாக இருக்கும்போது கேட்டால், 'இன்னும் இரண்டு மாதத்தில் பிறப்பான் என்பாள்.

"அதைப்போல என்னையும் தனியாகக் கேட்டால், விடுதலை எப்போது கிடைக்கும் என்றுஏதேனும் சொல்லமுடியும்;இத்தனைபேர் மத்தியில்கேட்டால் நானும் கன்னத்தைக் கொஞ்சம் கிள்ளி, 'விடுதலை கிடைக்கிறபோது கிடைக்கும்' என்றுதான் சொல்லவேண்டும்."

"நம்நாட்டில் அறிந்தவர்களைவிட அறியாதவர்கள் தொகை அதிகம், நமக்குத் தெரிந்தவை அவர்களுக்குத் தெரியாமலிருப்பது ஏன் என்று நீங்கள் யோசிக்கவேண்டும். நமக்கே இப்போது தான் தெளிவு ஏற்பட்டிருக்கிறது என்றால் அறியாதவர்களுக்கு எப்படித் தெளிவு ஏற்பட்டிருக்க முடியும் ?

"எனவே, காலம் கனியும்வரை நாம் காத்திருக்கத்தான் வேண்டும். நமக்குத் தெரிந்த விஷயம் எவ்வளவு—அதை எவ்வளவு பேருக்கு நாம் தெரிவித்தோம்—நாம்தெரிவித்தது அவர்களுக்கு எந்த அளவு புரிந்தது என்பதை ஒவ்வொருவரும் கணக்கிட்டுப் பார்க்கவேண்டும்.

—பூவிருந்தவல்லி மாநாட்டில் அண்ணா

3-ம் பக்கத் தொடர்ச்சி...............

வேண்டுமே? பரிட்சைக்குப் போதும் தமிழ்நாட்டிற்கு யார் பாடம் சொல்லிக்கொடுப்பது? தமிழ்நாட்டிற்குப் போதனைசெய்வதற்கு மாணவர்களைத்தவிர வேறு யார் இருக்கிறார்கள்? உங்களைக் கேட்கிறேன்? ஆசிரியர்களைக்கேட்கிறேன்—என்னை நானே கேட்டுக் கொள்ளுகிறேன். நீதியைக் கேட்கிறேன். அறிவைக் கேட்கிறேன். மாணவர்களைத்தவிர வேறு யார் இருக்கிறார்கள் தகுதியானவர்கள்? சர்க்கார் பகுத்தறிவுப் படையைக் கிளப்பவேண்டும். அந்தப் படையைத் தடையில்லாமல் இந்தப் பல்கலைக் கழகம் தரும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது அப்படை இங்குண்டு. அப்படையினர் நன்கு படித்தவர்கள். நல்லப் பிரச்சாரப் பழக்கமுள்ளவர்கள். பகுத்தறிவை ஆயுதமாக உடையவர்கள். பயமறியாதவர்கள் இவர்களால்தான் வீழ்ந்த சமுதாயத்தை உயர்த்தமுடியும். இதுதான் ஒரேப்படை! இதுதான் கடைசிப்படை! இப்படை வெற்றி பெறும் என்ற நம்பிக்கை எனக்குண்டு. "இப்படை தோற்கின் எப்படை ஜெயிக்கும்" என்றார்கள்.

நமது அண்ணா 1959-ல் துணைவேந்தர் திரு. தி. மு, நாராயணசாமி அவர்கள் தலைமையில், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் பட்டமளிப்பு விழா மண்டபத்தில் பேசும்போது குறிப்பிட்டார்கள், "எங்கள் மாணவர்கள் நாட்டிற்காகவும், மொழிக்காகவும் பாடுபடுகின்றவர்கள், சிறிது குறும்புக்காரர்களாக இருந்தாலும், நாட்டையும் மொழியையும் எண்ணி மாணவர்களை மன்னித்துவிடுங்கள்" என்று வேண்டுகோள் விடுத்தார்கள்.

இதையெல்லாம் மாணவர்கள்மீது உள்ள பற்றையும், பாசத்தையும் நாட்டிற்காகப் பாடுபடுவார்களென்ற அண்ணாவுக்கு இருக்கின்ற அசைக்க முடியாத நம்பிக்கைக்கு எடுத்துக் காட்டு. நாம் எல்லாம் அண்ணாவின் ஆணைக்கு கட்டுப்பட்டு, நாடெங்கனும் மாணவர் கழகங்களை அமைத்து பணி புரிவோமாக!

துர் : நானா......கொடியவன் ஆம்...நான் கொடியவன்தான்! இந்த நச்சரவங்களோடு சிறிது காலம் உடனிருந்து உங்களுக்குத் துரோகமிழைக்க நினைத்த நான் கொடியவன்தான் அதற்காக என்னை மன்னித்து விடுங்கள் மகாராஜா ஆனால் இந்த துரோகிகளை மட்டும் நம்பாதீர்கள்! உங்களை மாய்த்துவிட்டு இம்மண்டலத்தை அபகரிக்க திட்டம்வகுத்திருக்கிறார்கள் இந்த வஞ்சக நரிகள்! இப்போது நான் சொல்லும் எதையும் நீங்கள் நம்பும் சூழ்நிலையில் இல்லை!

(ஓடிய வீரர்கள், ஏனைய வீரர்களையும் அழைத்துக் கொண்டு துர்ஜயனைப் பிடிக்கவந்துக்கொண்டிருக்கின்றனர் அவர்களைக் கண்ட யோகானந்தர்)

யோ : ஓடிவாருங்கள்......ஓடிவாருங்கள்! பிடித்துக்கொண்டுபோய் சிறையிலடையுங்கள் இந்த பைத்தியக்காரனை!

துர் : பரதேசிப் பயலே! நானா பைத்தியக்காரன்? உன் திட்டங்கள் எதுவுமே பலிக்காது என்பதை மறந்து விடாதே! (மன்னனைப் பார்த்து) மன்னா...! என் பிணத்தைக் கண்டாவது திருந்துங்கள்; இத்தியவர்களை நம்பாதீர்கள்...!

(என்று சொல்லிக் கொண்டே மன்னன் அருந்தாமல் வைத்திருந்த மதுவை எடுத்து குடித்து விடுகிறான். வீரர்களும் அவனைப் பிடித்துக்கொண்டு போகிறார்கள். வாயிலைக் கடக்கு முன்னரே துர்ஜயன் பிணமாகச் சாய்கிறான். மார்த்தாண்டன் ஆச்சரியத்துடன் விரைந்தோட, யோகானந்தரும், மல்லிகாவும் அவ்விடத்தை விட்டு ஓட முயலுகின்றனர். இதையறிந்த மார்த்தாண்டன்)

மா : பிடியுங்கள்; இந்த நன்றிகெட்ட நாய்களை!

(வீரர்கள் மல்லிகாவையும், யோகானந்தரையும் கைது செய்கின்றனர்)

இழுத்துச் சென்று பாதாளச் சிறையிலே தள்ளுங்கள்! (வீரர்கள் இழுத்துச் செல்கின்றனர்) கருநாகப் பாம்புகளை கழுத்திலே அணிந்துக் கொண்டிருந்தேன்; மலர் மாலை என்று எண்ணி! பாவி நான்; இந்நரிகளின் வஞ்சகச்செயல்களை விளக்கி விளக்கிச் சொன்ன போதெல்லாம் நம்பாது போனேன்! முடிவில் தன் மரணத்தின் மூலம் அறிவித்துக் கொண்டான் இந்தத் தியாகச் சீலன்! துர்ஜயா...! மன்னனுயிரைக் காப்பதற்காகத் தன்னுயிரை ஈந்தனையோ? வைரத்தை நம்பாது கண்ணாடிக் கற்களை நம்பிக்கிடந்த இந்த நாசகாலனை மன்னித்துவிடு! துர்ஜயா; மன்னித்துவிடு! (திரை)

(அடுத்த இதழில் முடியும்)

இதோ! வடக்குச் செய்தி!

"நகையில்லை, நட்டில்லை! உடுக்க உடையில்லை! படுக்க பாயில்லை! குடிக்க கூழ் இல்லை! சிக்கனமாக வாழ வழி தெரியவில்லை! ஆனால் சினிமாவிற்கு செல்வது மட்டும் குறைவது இல்லை!" என்று குடிகேடான மகனைக் கண்டு கலங்குவாள் எந்த தாயும்!

அதைப் போலத்தான் திரைப் படத்தையே வெறுக்கும் நான் என்றுமில்லாமல் என் நண்பர்களோடு அன்று திரைப்படம் பார்க்கச் சென்றேன்; 'திரைப் படத்தை ஒழிக்க வேண்டும் என்று கூறிவிட்டு, திரைப்பட நிகழ்ச்சிகளுக்கு தலைமை வகிக்கும் நமது மந்திரிகளைப் போல! படம் தொடங்கு முன் செய்திப் படம் காட்டப்பட்டது. திடீரென்று அருகினில் அமர்ந்திருந்த என் நண்பர்; "ரகு பார்த்தாயா? இதிலேயும் வடக்கு வாழ்கிறது......தெற்கு தேய்கிறது! என்றார். எனக்கு புரியவில்லை, அதற்குள் இப்படியொரு விளக்கம் கூறப்பட்டது அந்த செய்திப்படத்தில்!

"இன்று பாலம் விமான நிலையத்தில் சோவியத் பிரதமரை நமது பாரத பிரதமர் பண்டிட் நேரு பலத்த ஆரவாரத்துடன் வரவேற்றார். ரஷியாவிற்கும் இந்யாவிற்கும் உள்ள நல்லுறவை பலப்படுத்தி, உலகெங்கும சமாதானக்கொள்கைபரவுவதற்கு இச்சந்திப்பு பயன்படும்."—ஊப! ஒரு காலத்தில் வந்தவர்களுக்கெல்லாம் இடங்கொடுத்து இன்று வந்தவர்களாலேயே வாட்டப்பட்டு, வறுமையிலே வாடும் தமிழகத்திற்கு லட்ச கணக்கில் செலவு செய்து ரஷிய பிரதமரை வரவேற்பதனால் மண்டிக் கிடக்கும் வறுமை மாண்டு விடுமா? அல்லது சமாதானத்தால்திபெத்தும் ஹங்கேரியும் சீறுவது நின்று விடுமா?

"அஸ்ஸாம் அணைத்திட்டத்தை டில்லி மந்திரி பந்த் பார்வையிட்டார். இத்திட்டத்தால் அஸ்ஸாம் ராஜ்யத்தில் ஏராளமான நிலங்களுக்கு நீர்ப்பாசன வசதி கிடைக்குமென கூறப் படுகிறது"—தென்னகத்தில் இன்னும் பல திட்டங்கள் தீட்டப் பெறுமலே இருக்கின்றன!

"மகாநதியின் வெள்ளப்பெருக்கத்தால் ஒரிசா பகுதியில் மக்கள் தத்தளித்தனர்"—இங்கே கூடத்தான் தஞ்சையிலே புயலடித்து கேட்பாரற்று கிடந்தனர் மக்கள்!

"பூனாவுக்கருகே தொழிற்சாலை ஒன்று கட்ட அஸ்திவாரக்கல் நாட்டப்பட்டது"-ஐயகோ! தொழில்கள் அங்கே! தொல்லைகள் இங்கே!

"திபெத்திலிருந்து தப்பி வந்த தலாய்லாமாவுக்கும், திபெத் அகதிகளுக்கும் டில்லி அரசாங்கம் பாதுகாப்பு அளித்துவருகிறது. இதிலிருந்து இந்தியாவின் நல்லெண்ணத்தை நேச நாடுகள் அறியும்!"—அதே சமயத்தில் பிறக்க ஒரு நாடு—பிழைக்க ஒரு நாடு என்ற நிலையினில், இலங்கையினிலே இரத்தத்தை சிந்தி, எலும்புக் கூடுகளாய் தாயகத்திற்கு திரும்பும் தமிழ் மக்க மக்களுக்கு......பாதுகாப்பு?

"பூரி ஜெகந்நாதர் ஆலயத்தில் நடந்த திருவிழாவில் யாத்திரீகர்கள் ஏராளமாக பங்கு கொண்டனர்" தமிழ்நாட்டு விழாக்கள் செய்திப் படத்தில் வந்ததாக நினைவில்லை!

நாகரசம்பட்டி வி. எல்.

'எடின்பரோர்கோமகனின்சுற்றுப் பயணத்தால் இந்தியாவின் சிற்பக்கலை புகழ் இங்கிலாந்திற்கும் எட்டியிருக்கும்"—ஆனால் அந்த சிலையை செதுக்கியவன் சோற்று கிடக்கிறான், என்பதை எப்படி அறியும் இங்கிலாந்து

"எழு பேர் அடங்கிய இந்திய தூது கோஷ்டி ஒன்று புது டில்லியிருந்து நேற்று விமானம் மூலம் அமெரிக்கா சென்றது" அதில் ஒருவர் கூட தமிழராக இருந்திருக்க மாட்டார்!

"திலகரின் பிறந்த நாள் பம்பாயில் விமரிசையாக கொண்டாடப் பட்டது. இதையொட்டி விளையாட்டு போட்டிகள் நடைபெற்றன—அஸ்ஸாம் நாட்டு பூர்விக குடிகளுக்கான புது கல்வித் திட்டம் ஒன்று வகுக்கப்பட்டுள்ளது நேற்று கல்கத்தாவில் ஐந்து இலட்சம் செலவில் கட்டப்பட்ட புதிய கட்டிடத்தை நேரு திறந்து வைத்து பேசுகையில், "பாரதத்தின் ஒற்றுமைக்கு அனைவரும் பாடுபடவேண்டும்" என்று கூறினார் — கும்பமேளாவையொட்டி தனி ரயில் வசதி செய்து தர அரசாங்கம் முன் வந்தது பாராட்டத்தக்கது — இந்தியாவிற்கும் ஆஸ்திரேலியாவிற்கும் நடந்த 'கிரிக்கட்' போட்டியில் இந்தியா வென்றது. வெள்ளத்தால் வீடு இழந்து தவிக்கும் மக்களுக்காக பீகார் அருகே புதிய காலனி ஒன்று நிர்மாணம்செய்யப்பட்டுள்ளது."

—என்று இங்ஙனம் செய்திப் படத்தின்மூலம் வடநாட்டு வளப்பத்தையே வெளிப்படுத்துவது, எரிகிற நெருப்பில் எண்ணெய் வார்ப்பதுபோல் இருக்கின்றதே!

எல்லாம் வல்லவர்

(இரா. இளஞ்சேரன்)

வளரும் சிந்தனைச் செல்வத்திற்கு ஐம்பதாவது ஆண்டு நிறைகிறது. அரசியலிலே கலையழகும், எழுத்திலே வேகமும், தமிழிலே எழிலையும் விளைத்திடும் புகழ்மிக்கபெருவாழ்விற்கு ஐம்பதாவது ஆண்டு நிறைகிறது.

செழித்திட்ட புதியதோர் விழிப்புணர்ச்சிக்கு, மொழியிலே அழகு சேர்த்த முதல்வனுக்கு, திராவிடர்தம் கண்ணின்மணிக்கு அண்ணாதுரை எனும் அரசியல் வித்தகருக்கு ஐம்பதாவது ஆண்டு நிறைகிறது.

ஐம்பது ஆண்டுகள்.....மனித வாழ்வில் சாமான்ய கால அளவு அல்ல இது!

1939-ல் தமிழர் தம் முதல் மொழிப் போராட்டம்.

1959 இப்போர்துடந்துகொண்டிருக்கிறது.

இடையே இருந்தவை இருபது ஆண்டுகள்.

இந்த இருபது ஆண்டுகளின் 'தியாக சரித்திரம்' தான் இன்று நாம் காணும் அண்ணாவை உருவாக்கித் தந்திருக்கிறது.

அண்ணா பொது வாழ்வில் புகுந்த காலை, இருண்டு கிடந்த பலதுறைகள் இனறு ஒளியோடு பிரகாசிக்கின்றன.

அரசியல் அரங்கம்
இலக்கிய மன்றம்
மேடைப் பேச்சு
திரைக் கலை
நாடக உலகம்

போன்ற பல துறைகளில் அண்ணாவின் முத்திரை—தனித்தன்மை அழுத்தமாகப் பதிந்திருக்கிறது.

தமிழ் மேடைப் பேச்சிலே தறிகெட்டுக்கிடந்த நேரத்தில் 'மகா கனம் பொருந்திய அக்ராசனாதிபதி அவர்களே! என்பனபோன்ற விகார அவையடக்கமும், பிரயோகங்களும் பேச்சுத் துறையை களங்கம் செய்திருந்த வேளையில், அண்ணா பேசத் துவங்கினார்.

சொற்பொழிவு மேடை இன்று அவரால் புதியதோர் பொலிவு பெற்றிருக்கிறது.

அண்ணாவின் சில பிரசித்தமான சொற் பிரயோகங்கள் இன்று பேச்சுக் கலையின் இலக்கணங்களாக மிளிர்கின்றன.

அண்ணா எழுதும் தமிழின் அழகே தனி. அந்த பாணி, அந்த அமைப்பு இன்று அவரை ஏசுவோருக்கும் சோறு போடுகிறது.

அவரது வேகமும் தெளிவும் நிரம்பிய கட்டுரைகள் அரசியலுக்கு மென்மையையும், கவர்ச்சியையும் வழங்கின.

எந்தத் துறையிலும் அவர் முதல்வர். பிறர் அவரது பின்னோடிகளே! அண்ணாவின் அடிச்சுவட்டைப் பின்பற்றும் 'பற்றுக் குறைகள்' கூட வாழ்வு பெறும் அளவிற்கு அவரது தனித்தன்மை நாட்டிலே இன்று செல்வாக்கு பெற்றிருக்கிறது.

குட்டைகுழப்பும் பண்பு அண்ணாவின் பொது வாழ்வில் இதுவரை இடம் பெற்றதேயில்லை.

தெளிவு ஒளி தவழும் தெளிவு அண்ணாவின் சிறப்பியல்பு அவரது புகழ்கூட இதனால்தான் பூரணத்துவமடைகிறது.

அண்ணா இந்தப் பெயர் இன்று நாட்டின் இதயத்துடிப்பு.

அண்ணா இந்த உருவிலே தென்னகத்தின் மனச்சாட்சியே உருப்பெற்றிருக்கிறது.

அண்ணா இந்தப் பெயரிலே அடிமைச் சகதியிலே உழலும் தாயகத்தினரின் ஆசாபாசங்கள் அற்புதமாகக் கனிந்து இனிக்கின்றன.

அண்ணா அரசியலை கலையாக்கித் தந்தவர். எனவேதான் மற்ற தலைவர்களிடமில்லாத கவர்ச்சியை அவரிடம் நாடு காண்கிறது.

தனி மனிதர் ஒருவரின் எழுத்திலும் பேச்சிலும் ஒரு நாட்டின் கருத்து அப்படியே எதிரொலிக்கும் அதிசயம் வரலாற்றில் எப்போதாவது தான் நிகழ்கிறது.

இந்த அதிசயம் நம் காலத்திலே நம் கண் முன்னாலே நடக்கிறது. எனவே அண்ணா வாழும் போது வாழும் நாமும் பெருமைக்குரியவர்கள்.

இமயம் போன்ற புகழுடைய அவர் எல்லாம்வல்ல திறனுடையவர்.

எங்கோ தொலைந்துபோன நல் வாழ்வைத் தேடித்தரும் விடுதலை வித்தகராக நாடு அவரை நினைக்கிறது.

சிந்தனைமிகுந்த அரசியல் மேதை, நிகரற்ற எழுத்தாளர், சிறந்த பேச்சாளர், தாயகத்திற்குக் கிடைத்த ஒரே தலைவர், கலைமேதை என றபல்வேறு நிலைகளிலே எதிர்காலவரலாறு அண்ணாவை பிரமாதமாக சித்தரிக்கக் காத்திருக்கிறது. கவிஞர் அதனைக் காண்கிறார். அந்தச் சொற்களில்தான் எத்துணை எக்காளம்?

குலமுறை "அண்ணா" என்னும்
கொடிநிழல் "தலைவா"! என்னும்
கலைமனம் "அறிவே!" என்னும்
கவிக்குரல் "புலவா!" என்னும்
அலைதமிழ் "உயிரே!" என்னும்
அவனியே "புனிதா!" என்னும்
தலைமுறைக் கிவரல்லாது
தலைவரென் றொருவர் இல்லை!

—கண்ணதாசன்

விரைவில் வருகிறது



கண்ணதாசன் புரொடக்ஷன்ஸ்

கவலையில்லாத மனிதன்

5-ம் பக்கத்தொடர்ச்சி..................

அண்ணாவால் கொண்டுபோகப் பட்டேன்.

என்னைத் தொண்டனாக்கிய ஒரு ஏட்டுக்கு நான் ஆசிரியன்! எனக்கு ஒரே பயமாயிருந்தது. பல நண்பர்கள் என்னை அப்போது பரிதாபமாகக்கூடப் பார்த்தார்கள். ஆனால், அண்ணா துணிச்சலோடு என்னை நம்பினார்; ஆளாக்கினார்; எழுதத் தொடங்கினேன். அங்குபோய் ஓரிரு மாதம் வரையிலும், அண்ணா, கழகத்தில் கண்ணீர்த்துளிகள் சிந்தப்படுவதைப் பார்த்துக் கொண்டிருந்தாரே ஒழிய எந்த முடிவுக்கும் வரவில்லை. எனக்குச் சந்தேகம் வளர்ந்தது, 'சரிதான! ஒன்றும் சரியாகாது போலிருக்கிறது,' என்று என்னைப்போன்றவர்கள் கூடிக் கூடிப் பேசலானோம்.

நல்ல இடைவெளி கொடுத்து, அய்யாவின் வாதங்களைப் பலரும் கேட்கச்செய்து, அப்படியும் அவர் பக்கம் செல்பவர் யாராவது இருக்கிறார்களா என்று வடிகட்டி, பிறகே, முன்னேற்றக் கழகம் காண முடிவெடுத்தார். பிறகு எந்த அண்ணா சோம்பேறியென்று கருதப்பட்டரோ, அவர் சூறாவளியானார்! அரசியலில் நல்லாசி என்று அய்யாவால் குற்றஞ்சாட்டப்பட்டவர், ஓடு ஓடு' என்று உழைக்கலானார்!! அவருடைய உழைப்பின் அளவை நீங்களெல்லாம் அறிவீர்கள்.

அப்படிப்பட்ட அண்ணாவுக்கு இன்று வயது ஐம்பது! ஆச்சரியமாயிருக்கிறதுஎண்ண 'அய்யோ அண்ணாவுக் ஐம்பது வயதாகிவிட்டதாமே?' என்கிற பரபரப்பும் உண்டாகிறது! அவருக்கு அறுபது வயதாவதற்குள், நாம் எப்படியாவது திராவிட நாடு கண்டு, அத்திராவிடத்தின் ஒளி விளக்காய் அவரை வைத்துப் பார்க்கவேண்டும்! அதற்குப்பாடு படவேண்டும். அவருக்குக்காட்ட வேண்டிய நன்றி, அதுதான்.

திராவிடன் தரும் தேன்விருந்து

நீதி எங்கே?

(தொடர் நாடகம்)

கதை	வசனம்
பூவை ராமசாமி	**மா. தங்கவேலர்**

சட்டமும்.........சதிகாரர்களும் நீதியைத் துரத்தியடித்தனர். ஆனுல் உண்மையின் பேரொளி, வாழ்வின் நீதி......பிறக்காமல், போகவில்லை. வாழ்வு வானத்தை ஏக்கத்தோடு தலைதூக்கிப் பார்த்த வேலழகரின் கண்களின் முன்னே நம்பிக்கை நட்சத்திரம் தெரியாமல் போகவில்லை. அந்த நீதி பிறந்து அந்த நல்லவரின் வாழ்வு சிறந்த கதைதான் நீங்கள்

அக்டோபர் 17-ம்நாள் இதழிலிருந்து படிக்கப்போகும் 'நீதி எங்கே' என்ற நாடகம். புதுமையும் பொலிவும் நிறைந்த கற்பனை. நாட்டுக்குத் தேவையான புத்தம் புதிய திருப்பங்களைக் கொண்ட எழிலான நாடக ஓவியம்.

'திராவிடன்' வார இதழில் தொடங்குகிறது!

ஆசிரியர், அச்சிடுவோர், வெளியிடுவோர்: என். வி. நடராசன், சோமு அச்சகம், 16/17 திருநாவுக்கரசு முதலி தெரு, பெரம்பூர், சென்னை-11.